DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 207/2024 |
| Deposition of Witness for | : | P.W. 3 |
| Name | : | **மாரியப்பன்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 12.02.2026

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது பட்டமங்கலத்தில் நான் வசித்துவருகிறேன். நான் கேபிள் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 தெரியும். வழக்கின் எதிரி பாலமுருகன் என்பவரை தெரியும். கடந்த 23.01.2019 ம் தேதி புகழேந்தி என்பவர் போன்மூலம் கேபிள் கட்டாகியிருப்தாக சொன்னார். நான் ஏரியூருக்கு சென்றேன். நான் கேபிள் பால்ட்டை பார்த்துவிட்டு நான் , புகழேந்தி , மலையாண்டி ஆகியோர் பார்த்து விட்டு மோட்டார் சைக்கிளில் வந்த போது எதிரி பாலமுருகன் வயரை அருவாளால் துண்டித்துகொண்டிருந்தார்.

2. அதை ஏன் என்று கேட்ட புகழேந்தியை சரமாரியாக தகாத வார்த்தைகளால் திட்டிவிட்டு அருவாளால் வெட்ட சென்றார். நானும் மலையாண்டியும் சமதானப்படுத்திவிட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுக்குமாறு சொன்னோம். கேபிள் வயர்கள் 1கி.மீ தூரத்திற்கு துண்டு துண்டாக வெட்ப்பட்டிருந்தது. பின்பு புகழேந்தி அவரது உறவுக்காரர் பிரவின் ராஜ் என்பவரை அழைத்துகொண்டு புகார் கொடுப்பதற்காக திருக்கோஷ்டியூர் காவல்நிலையத்திற்கு சென்றார். அதன் பிறகு நாங்கள் வேறு வேலை பார்ப்பதற்காக சென்றுவிட்டோம். போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. கேபிள் டி வி வேலை செய்வதற்கு உரிமம் அல்லது தொழில் சார்ந்த கல்வி கற்றதற்கான ஆவணம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை. அ.சா.1 எனக்கு 6 மணிக்கு போன் மூலம் தகவல் சொன்னார். பட்டமங்கலத்தில் இருந்து ஏரியூர் வருவதற்கு 1 மணி நேரம் ஆகும் என்றால் 45 நிமிடங்கள் ஆகும். பட்டமங்கலத்தில் இருந்து ஏரியூர் சுமார் 12 முதல் 13 கிமீ இருக்கும் . சம்பவ இடத்திற்கு 7 முதல் 7.15 மணிக்குள் வந்தேன் என்றால் சரிதான். எதிரி தரையில் நின்றுகொண்டுதான் கேபிளை வெட்டினார் என்றால் சரிதான். கேபிள் தொங்கிய உயரம் சுமார் 7 அடிக்குள் இருக்கும். கேபிள் எவ்வளவு உயரத்தில் இழுத்து செல்லவேண்டும் என்பது எனக்குதெரியாது. அது சம்பந்தமான சட்ட விதிகள் எனக்கு தெரியாது. E- வலையப்பட்டி பகுதியில் கேபிள் டிவி உரிமம் அ.சா.1 தான்207/2024 பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

2. அரளிக்கோட்டை பகுதியில் கேபிள் உரிமம் கணேசன் என்பவருக்கு உள்ளது என்றால் சரிதான். 1கி மீ தூரத்திற்கு 4 - 5 இடங்களில் துண்டிக்க பட்டிருந்தது என்றால் சரிதான். கேபிளை துண்டு துண்டாக வெட்டவில்லை என்றால் சரிதான்.சம்பவ இடத்தில் இருந்து மதகுபட்டிக்கு காலை 08.00 மணிக்கு சென்றுவிட்டேன். காவல்நிலையத்திற்கு 12 முதல் 01.00 மணிக்குள் எங்களை விசாரணை செய்தனர்.

3.என்னை சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தார். நான் முதல் விசாரணையில் சொன்னதை தவிர வேறு விசயங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். 7 அடி உயரத்தில் கேபிள் வயரை அருவாளால் வெட்டமுடியாது என்றால் சரியல்ல. எனக்கு கேபிள் வேலை செய்வதற்கு தகுதியான நபர் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அ.சா1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் சேர்ந்து E- வலையப்பட்டி பகுதியில் கேபிள் வயர்களை திருடி சென்றது சம்பந்தமாக எதிரிகொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.12 11:04:17 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**